# மலையாளக் கவிஞருக்கு ஞானபீட விருது

## திருக்குறள் : ஒலிப்பதிப்பு

தமிழர்களின் வாழ்வியல் மேன்மையைக் காட்டும் திருக்குறளின் 1330 அருங்குறட்பாக்களையும் உரையுடன் இந்தக் குறுந்தகட்டில் பதிப்பித்துள்ளனர். அதிகாரத்தின் எண்ணும், அதிகாரத் தலைப்பும், குறளும், அதற்குரிய பொருளும் நிறைவும் கொண்டு ஒவ்வொரு அதிகாரமும் இந்தக் குறுவட்டில் சிறப்புடன் பதிவு செய்யப் பெற்றுள்ளது. மென்மையான பின்னணி இசை இதன் சிறப்பு. திருக்குறளை இனிய குரல்வளத்துடன் பொருள் விளங்கும்படி படித்து, கேட்பவர்களுக்குச் சலிப்பு ஏற்படாமல் பதிவு செய்துள்ளமை பாராட்டத் தகுந்த முயற்சி. பேராசிரியர் க.ப.அறவாணனின் திருக்குறள் உரை இந்த ஒலிப்பேழையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

விலை: ரூ. 150; வெளியீடு: Universal e Publishers; மின்னஞ்சல்: contactus@universalpublishers.com; தொலைபேசி: 96291 88882

## மலையாளக் கவிஞர் குரூப்புக்கு ஞானபீட விருது

இலக்கியத்துக்கான நாட்டின் உயரிய விருதான ஞானபீட விருதுகள் சென்ற மாதம் அறிவிக்கப்பட்டன. பிரபல மலையாள இலக்கியவாதி ஓ.என்.வி.குரூப் மற்றும் உருது கவிஞர் அக்லக் கான் ஷாரியார் ஆகிய இருவரும் முறையே 2007 மற்றும் 2008ஆம் ஆண்டுக்கான ஞானபீட விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். பிரபல ஒரியா எழுத்தாளரும், ஞானபீட விருது பெற்றவருமான சீதாகாந்த் மஹாபாத்ரா தலைமையிலான ஞானபீட தேர்வு கமிட்டி இதற்கான அறிவிப்பை வெளியிட்டது. இலக்கியத் துறையில் இவர்கள் ஆற்றிய சிறப்பான பணிக்காக இந்த விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓஎன்.வி. குரூப், கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இருபதுக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுப்புகளை குரூப் வெளியிட்டுள்ளார். அவரது உஜ்ஜயினி, ஸ்வயம்வரம் ஆகிய பாடல் தொகுப்புகள் மிகவும் பிரபலமானவை. குறிப்பாக, சமூக தத்துவார்த்தப் பாடல்களில் இவர் மிகவும் பிரபலமானவர். இவர் ஏற்கெனவே, கேரள சாகித்ய அகாதெமி விருது, சாகித்ய அகாதெமி விருது, வயலார் விருது,



பத்மஸ்ரீ உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

அக்லக் கான் ஷாரியார், உத்தரப் பிரதேச மாநிலம், ரேபரேலியில் முஸ்லிம் ராஜ்புத் குடும்பத்தில் பிறந்தவர். அறிவுஜீவி கவிஞராக வர்ணிக்கப்படும் இவர் கொள்கை, கோட்பாடுகளை விட்டுக்கொடுக்காதவர் என்னும் வகையில் விமர்சகர்களால் மிகவும் பாராட்டப்பட்டவர். தற்கால உருது கவிதைகளுக்கு வடிவம் கொடுத்ததில் இவரது பங்கு மிக முக்கியமானது. இவர் ஏற்கெனவே, உத்தரப் பிரதேச மாநில உருது அகாதெமி விருது, சாகித்ய அகாதெமி விருது, தில்லி உருது அகாதெமி விருது மற்றும் ஃபிராக் சம்மான் விருதுகளைப் பெற்றுள்ளார்.

## சாகித்ய அக்காதெமி: குழந்தை இலக்கிய விருது

சாகித்ய அக்காதமி ஆண்டுதோறும் படைப்பிலக்கியம், மொழிபெயர்ப்பு ஆகிய பிரிவுகளில் பரிசு வழங்கி வருகிறது என்பது நம் அனைவருக்கும் தெரிந்த செய்தி. 'பால சாகித்ய புரஸ்கார்' என்ற பெயரில் இவ்வாண்டு முதல் சிறுவர் இலக்கியத்திற்கும் விருது வழங்கத் தொடங்கியுள்ளது, அக்காதெமி. இவ்வாண்டிற்கான 'பால சாகித்திய புரஸ்கார்' விருது திண்டுக்கலைச் சார்ந்த குழந்தை எழுத்தாளர் கமலவேலனுக்கு அறி




விக்கப்பட்டுள்ளது. 'அந்தோணியின் ஆட்டுக்குட்டி' என்ற நூலுக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டிருக்கிறது. 1961 முதல் எழுதி வரும் கமலவேலன் அரும்பு, கோகுலம், தினமணியின் சிறுவர் மணி ஆகிய இதழ்களில் தொடர்ந்து எழுதி வருகிறார். ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர் ஏற்கெனவே, அறிவொளி இயக்கத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக மால்கம் ஆதிசேசய்யா விருது பெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.